# உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளும் பிரஜைகளின் திருப்தி நிலையும்: வலி தெற்கு பிரதேச சபையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

ம. தனுஜா, தி. விக்னேஸ்வரன்
msthanuja99@gmail.com, tkvignes@univ.jfn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு நாட்டில் உள்ள அரசானது அந்நாட்டில் வாழுகின்ற மக்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட நிறுவனங்களே உள்ளூராட்சி அரசாங்கங்களாகும். அதனடிப் படையில் இலங்கையில் மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் என்ற மூன்று வகையான உள்ளூராட்சி கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. அந்தவகையில் பிரதேசசபைக் கட்டமைப்பான வலி தெற்கு பிரதேச சபையானது இலங்கையில் உயர்தரத்திலான சேவைகளினையும் உட்கட்டமைப்பு வசதியினையும் கொண்ட உள்ளூராட்சி அமைப்பாக விளங்குதல் எனும் தூரநோக்கினைக் கொண்டு தமது சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. வலி தெற்கு பிரதேசமானது யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் மத்திய பகுதியில் 30.01 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும், 51612 மக்கள் தொகையினையும் உள்ளடக்கிய ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது. வலி தெற்கு பிரதேச சபையானது எவ்வகையான சேவைகளினை வழங்குகின்றது என்பதனை இணங்கண்டு அந்த சேவைகளை வலி தெற்கு பிரதேச சபை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்குகின்ற சவால்கள் மற்றும் தடைகளினையும் ஆராய்வதாகவும் வலி தெற்கு பிரதேச சபையினால் இச் சேவைகளை நடைமுறைப்படுத்தும் போது அச்சேவைகள் தொடர்பாக மக்களின் மனோநிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பாகவும் இவ்வாய்வானது ஆராய்கின்றது. மேலும் இவ் ஆய்வானது பண்புசார், அளவுசார் தரவுகள், தகவல்களினைக் கொண்டு புள்ளிவிபரவியல் விபரணப் பகுப்பாய்வு முறையினைப் பயன்படுத்தி ஆராயப்பட்டுள்ளது. அதாவது வலி தெற்கு பிரதேச மக்களுக்கு வலி தெற்கு பிரதேச சபையானது எவ்வாறான சேவைகளை வழங்குகின்றது அந்த சேவைகள் தொடர்பாக மக்கள் எவ்வாறான திருப்தி மட்டத்தில் உள்ளார்கள் என்பதனை அறிந்து கொள்வதாக முதலாம் நிலை தரவுகளான வினாக்கொத்து, குழுக்கலந்துரையாடல், நேர்காணல் முறைகளின் ஊடாக தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் ஆய்விற்குத் தேவையான தரவுகளை ஆய்வுக்கட்டுரைகள், இணையதளங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், பிரதேச சபை ஆவணங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றம் தொடர்பான பாராளுமன்றச் சட்டங்கள் என இரண்டாம் நிலை தரவுகளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களின் பகுப்பாய்வின் அடிப்படையில் பரிந்துரையும் முடிவுரையும் முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே இவ் ஆய்வின்படி வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் குறித்த பிரதேச மக்களுக்கு போதுமானவையாகவும் அவர்களை திருப்திப்படுத்தக் கூடியதாகவும் அமைந்துள்ளதா? என்பது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் இவ் ஆய்வின் பிரகாரம் வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் குறித்த பிரதேச மக்களுக்கு போதுமானவையாகவும் அவர்களினை திருப்திப்படுத்த கூடியதாகவும் அமைய வில்லை என்ற ஆய்வு முடிவானது ஆதாரங்களின் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** பிரதேச சபைகள், சேவை வழங்கல், உள்ளூராட்சி மன்றங்கள், அதிகாரங்களும் பொறுப்புக்களும், நலச்சேவைகள்.

## ஆய்வின் அறிமுகம்

நவீன நலன்புரி அரசுகளில் பொதுநிர் வாகம் இன்றியமையாத ஒன்றாக மாறியுள் ளது. பொது நிர்வாகம் என்பது திட்ட மிட்ட இலக்கினை அடைவதற்காக அரசாங் கத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளையும் குறித்து நிற்கின்றது. இதனால் நவீன அரசுகள் நிர்வாகக் கட் டமைப்புகளை உருவாக்கி அதிகாரப் பரவ லாக்கச் செயன்முறையை மேற்கொண்டுள் ளன. இலங்கையின் பொது நிர்வாக முறை மையானது காலனித்துவவாதிகளின் சாயல் களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகை யில் நீண்ட வரலாற்றினை கொண்டதாகவும் காலத் துக்கு காலம் சீர்திருத்தத்தினையும் மாற்றத் தினையும் உள்வாங்கி செயற்படுகின்றது.

அந்தவகையில் அரசியலில் அடிமட்டப் பிரதி நிதித்துவத்தை மக்களுக்கு உறுதிப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி முறைமைகள் தற்போது இலங்கையில் மூன்று வகையாக காணப்படுகின்றன. அவையாவன, மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்பனவாகும். இலங்கையின் உள்ளூராட்சி அரசாங்க கட்டமைப்பானது நீண்ட வரலாற்றினைக் கொண்டது குறிப் பாக பிர்த்தானியர் காலப்பகுதியில் இரண்டு பிரதான அபிவிருத்தகள் இலங்கையின் உள்ளூராட்சி கட்டமைப்பில் ஏற்படுத்தப் பட்டது. அதில் ஒன்று அரசியல் மற்றும் சமூக மாற்றத்தினாலும் சனத்தொகை அதி கரிப்பினாலும் ஏற்பட்ட மக்களது வேறுபட்ட தேவைகளினை பூர்த்தி செய்யக்கூடிய நவீன விடயங்கள் உள்வாங்கப்பட்டமை.

பொதுவாக உள்ளூராட்சி அரசாங்கங்கள் மூன்றாம் உலக நாடுகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளது உள்ளூர் அரசியல் விவ காரங்களினைக் கையாளவும் மக்களது உள்ளூர் தேவைகளினைப் பூர்த்தி செய்வது டன் மட்டுப்பட மேற்குலக நாடுகளது உள் ளூராட்சி அரகாங்கங்கள் மக்களினை அரசி யல்மயப்படுத்தல், மக்களது சுகாதாரம், பொழுதுபோக்கு, கல்வி, அரசியல் பங்கு பற்றுதல் மற்றும் அரசியல் பயிற்சிக்கான ஒரு களமாக முழுமையான அதிகாரங்களுடன் சுயாதீனமாக தொழிற்பட்டு வருவதனைக் காணலாம்.

இலங்கையின் உள்ளூராட்சி கட்டமைப்பில் மிகவும் அடிமட்ட அமைப்பாக பிரதேச சபைகள் காணப்படுகின்றன. "பிரதேச சபை என்ற நிறுவன அமைப்பு பாராளுமன்ற சட் டத்தின் 1987 இன் 15-ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச்சட்டத்தின் மூலம் உள்ளூ ராட்சிக்கான அதிகாரங்கள் ஒப்படைக்கப் பட்டுள்ளன" (விக்னேஸ்வரன், 2011). ஒவ் வொரு பிரதேச சபைக்கும் சனத்தொகை, பரப்பளவு என்பவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட உறுப்பினர்கள் விகிதாசார மற்றும் பட்டியல் முறையினை உள்ளடக்கிய கலப்புத் தேர்தல் முறையின் ஊடாக தேர்வு செய்யப்படுவர். ஏறத்தாழ 271 பிரதேச சபை கள் இலங்கையில் காணப்படுகின்றன.

வலி தெற்கு பிரதேச சபையானது, இலங்கை யில் உயர்தரத்திலான சேவைகளையும் உட் கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட உள் ளூராட்சி அமைப்பாக விளங்குதல் எனும் தொலைநோக்கினைக் கொண்டு தொழிற் படுகின்றது. வலி தெற்கு பிரதேச சபையின் கீழ் சுன்னாகம் உப அலுவலகம், உடுவில் உப அலுவலகம், ஏழாலை உப அலுவலகம் என மூன்று உப அலுவலகங்கள் செயற் படுகின்றன. பல்வேறு சேவைகளை வலி தெற்கு பிரதேச சபை மேற்கொண்டாலும் அச் சேவைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் சாதக, பாதக விளைவுகள் காணப்படுவதை காணலாம். அதாவது வலி தெற்கு பிரதேச சபையானது தனது சேவைகளை வழங்கும் போது பல சவால்களை எதிர்நோக்குகின்றது. இதனால் மக்கள் தமது சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதன் அடிப் படையில் வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகள் மக்களின் திருப்தி மட்டத்தில் எவ்வாறு செல்வாக்கு செலுத்து கின்றது என இவ் ஆய்வில் ஆராயலாம்.

## ஆய்வுப் பிரச்சினை

வலி தெற்கு பிரதேச சபையானது ஒப்பீட்டு ரீதியில் போதுமான ஆளணியினர் மற்றும்

உட்கட்டமைப்பு வசதிகளினைக் கொண் டுள்ளபோதும் ஏன் உள்ளூர் மக்களது தேவைகளினை முழுமையாகவும் திருப்தி கரமாகவும் உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதனை பிரதான ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு முன் னெடுக்கப்படுகின்றது. மேலும் இவ் ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி அமைப்பின் சேவைகள் எவை என அடையாளப்படுத்தல், வலி தெற்கு பிர தேச சபை தமது சேவைகளை முழுமையாக மக்களுக்கு வழங்க முடியாமைக்கான தடை களையும் சவால்களையும் இனங்காணல், மற்றும் வலி தெற்கு பிரதேச சபையின் சேவை தொடர்பாக மக்களின் திருப்தி நிலையினை அறிதல் போன்ற ஆய்வு வினாக்களுக்கு விடை காண்பதுடன் வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளை இணங்காணுதலும் அந்த சேவையை வழங்கு வதில் பிரதேச சபை எதிர்நோக்குகின்ற சவால்களையும் தடைகளையும் இனங்கண்டு வெளிக்கொணர்தல், மற்றும் வலி தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மக்கள் குறித்த பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பாக என்ன மனோநிலையில் உள்ளார்கள் என வெளிக்கொணர்தல் ஆகியன இவ் ஆய்வின் நோக்கங்களாகவும் உள்ளன.

### ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது பண்புசார் மற்றும் அளவு சார் தரவுகள், தகவல்கள் பயன்படுத்தப் பட்டுள்ளதுடன் புள்ளிவிபரவியல் விபரண பகுப்பாய்வு முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. வலி தெற்கு பிரதேச மக்களுக்கு வலி தெற்கு பிரதேச சபை எவ்வாறான சேவைகளை வழங்குகின்றது என முதலாம் நிலை தரவுகள் மற்றும் இரண் டாம் நிலை தரவுகளில் இருந்து பெறப்பட் டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகள் - வினாக் கொத்து, குழுக்கலந்துரையாடல், நேர் காணல் முறைகளுக்கு ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக எழுமாற்ற டிப்படையில் பிரதேசத்தில் வாழ்கின்ற 100 பிரைஜைகளிடம் வினாக்கொத்து மூலம் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டதுடன் 05 பிரதேச சபை ஊழியர்களிடம் நேர்காணல் மூலமாகவும் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுப் பிரதேசம் பற்றிய தரவுகள் ஆய்வுக் கட்டுரைகள், இணையதளங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், பிரதேச சபை ஆவணங்கள், பிரதேச சபை பொதுமக்கள் சேவைபட்டயம், உள்ளூராட்சி மன்றம் தொடர் பான பாராளுமன்ற சட்டங்கள் என்பவற்றின் ஊடாக இரண்டாம் நிலைத்தரவுகள் மற்றும் தகவல்கள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளது.

### கோட்பாட்டு கலந்துரையாடலும் இலக்கிய மீளாய்வும்

Uyangoda, (2015) Local Government and Local Democracy in Sri Lanka: Institution and Social Demonisms இந்நூலானது இலங்கை யின் உள்ளூராட்சி அரசாங்கங்கள் மற்றும் உள்ளூர் ஜனநாயகம் தொடர்பாக விரிவாக வும் ஆழமாகவும் ஆராயப்பட்டுள்ளது. குறிப் பாக நூலின் முதல் பகுதியில் இலங்கை யின் உள்ளூராட்சிக் கட்டமைப்பின் சுதந் திரத்திற்கு முன்னரான மற்றும் பின்னரான வரலாறு தெளிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் இரண்டாம் பகுதியில் உள்ளூராட்சி மன் றங்களுடனான அதிகாரப் பரவலாக்கம் அதி காரரப் பங்கீடு, ஜனநாயக செயற்பாடுகளும், கிராமிய மட்டத்திலான மக்களது பங்கு பற்றுதலும், பெண்களுக்கான அரசியல் களம் போன்ற விடயங்களுடன் உள்ளூராட்சி யுடனான கடந்தகால நிகழ்கால மற்றும் எதிர் கால வகிபாகம் தொழிற்பாடுகள் தெளிவாக ஆராயப்பட்டுள்ளது. மேலும் இந்நூலுக்கு பங்காற்றிய ஆய்வாளர்கள் உள்ளூராட்சி அரசாங்கங்கள் தொடர்பாக ஏற்கனவே பல ஆராய்ச்சிகளினையும் நூல்களையும் வெளி யிட்டுள்ளமையினால் இவர்களது கருத்துக் களும் வாதப் பிரதிவாதங்களும் எனது ஆய் வுக்கட்டுரையில் ஆரம்பத்திலிருந்து முடி வுரைக் கலந்துரையாடல் வரையில் தாக்கம் செலுத்தியுள்ளமையினால் இந்நூலானது இவ்வாய்வின் இலக்கிய மீளாய்வில் மிகப்பிர தானமாகவுள்ளது.

புஞ்சிஹேவா, (2007), "உள்ளூராட்சி மன்றங் களில் மக்கள் பிரதிநிதிகளின் நடைமுறை

கள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகள்" எனும் நூலில் உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளினுடைய செயற்பாடுகள் நடைமுறைகள் மற்றும் அவர்களுக்கான பொறுப்புகள் கடமைகள் என்பன பற்றியும் உள்ளூராட்சி மன்றங்களான நகர சபை அல்லது பிரதேச சபை தலைவரின் பொறுப் புக்கள் அவற்றின் நடைமுறைகள் என்பதை யும் மக்களுடைய பிரதிநிதிகளாக உள்ளூ ராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் படும் பொறுப்புக்களும் அதன் நடைமுறை பற்றியும் இந்நூல் விபரிக்கின்றது. இது உள் ளூராட்சி மன்றங்களது கட்டமைப்புக்கள், பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களினை விளங்கிக்கொள்ள உதவியுள்ளது.

அபயவர்த்தன, (1997), "பிரதேச சபை சேவை கள்" என்ற நூலில் இலங்கையின் உள்ளூ ராட்சி மன்றங்கள் நாடு முழுவதும் வியா பித்து காணப்படும் பிரதேச சபைகளின் உருவாக்கம், அவற்றின் வளர்ச்சிக் கட்டங் கள், சட்ட பின்னணிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், பொறுப்புக் கள், எதிர்காலப் போக்குகள் என்பவற்றை உள்ளூராட்சி மன்றங்களை மையமாக வைத்து ஆய்வு ரீதியாக நோக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்நூலில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார பகிர்வு முக்கியத்து வப்படுத்தப்பட்டுள்ளது. இது எனது ஆய்வில் உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பினை விளங்கிக்கொள்ள ஏற்றதாக அமைகின்றது.

அபேரத்ன, (2007), அவர்களின் "உள்ளூ ராட்சி நிறுவனங்கள்" எனும் நூல்களில் உள்ளூராட்சி மன்றங்கள் என்றால் என்ன என்பது தொடர்பாகவும் உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டதற்கான நோக் கங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள் வதற்காக செயற்படுத்தும் ஆற்றல், திறன்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும் வளங்கள், திட்டங்கள் என்பன தொடர்பாகவும் உள்ளூராட்சி நிறு வனங்களின் ஜனநாயக செயற்பாடுகள் எவ் வாறாக அமைக்கப்பட்டுள்ளது அதன் நடை முறை எவ்வாறானது என்பது பற்றியும் மக்களுடைய பங்கேற்பு நிலை பற்றியும் உள்ளூராட்சி மன்றங்களில் செயற்படுத்தப் படும் செயற்பாடுகள், திட்டங்கள் என்பன பற்றியும் உள்ளூராட்சி மன்றங்களில் காணப் படுகின்ற குறைபாடுகள் மற்றும் எதிர்கொள் ளும் பிரச்சினைகள் இந்நூலில் இருந்து என் ஆய்வுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டது. இந் நூலானது நேரடியாகவும் மறைமுகமாகவும் இவ் ஆய்வுக்கு பயன்பட்டுள்ளது.

விக்னேஸ்வரன், (2011), பிரசாத்,(2016), ஆகி யோரின் நூல்களில் இலங்கையிலுள்ள உள் ளூராட்சி அமைப்புக்களின் வரலாற்று வளர்ச்சி, அவற்றின் கட்டமைப்புகள், அவற்றின் தொழிற்பாடுகள் மற்றும் அவை சேவை வழங்குவதில் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாககுறிப்பிடப்பட்டுள்ளதுடன்பிரதேச சபை தொடர்பான விடயங்களும் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களது நூல்கள் எனது ஆய்வு நிறுவனமான பிரதேச சபை யினை விளங்கிக்கொள்ள உதவியுள்ளது.

Report of the commission of Inquiry on Local Government Reforms. Abhayewardhana.HA.P, Gunapala Nanayakkara, Siripalan Thelambura Hettige, Keertiratne.J.G, Selvakumaran.N., 1999. என்ற அறிக்கையானது முன்னாள் ஜனா திபதி சந்திரிக்க குமாரதுங்கவினால் 1999ம் ஆண்டு உள்ளூராட்சி அரசாங்க கட்டமைப் பினை மறுசீரமைப்பதனை நோக்கமாகக் கொண்டு ஐவர் அடங்கிய குழுவினை நடை முறையில் தொழிற்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களினை ஆராய்ந்து அறிக்கை சமர்ப் பிக்குமாறு கோரியமைக்கு அமைவாக இவ் அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது உள்ளூராட்சி அரசாங்கங்களது கடமைகள், பொறுப்புக்கள், வளங்கள், மற்றும் அதி காரங்கள் போன்றவற்றினை ஏனைய நாடு களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து எவ்வகையான மாற்றங்களினையும் புனரமைப்புகளினை யும் உள்ளூராட்சி கட்டமைப்பில் மேற் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் பரிந்துரைகள் உள்ளடங்களாக ஒரு முழுமை யான அறிக்கையாக இது வெளிவந்தது. இவ் அறிக்கையானது இவ் ஆய்வுக்கு தேவையான

பிரதேச சபைகளது அதிகாரங்கள், பொறுப்புக்கள், கடமைகள், மற்றும் வரையரைகளினை விளங்கிக் கொள்ளவும் அரசியல் ரீதியான மட்டுப்பாடுகளினை புரிந்து கொள்ளவும் இவ் அறிக்கை ஒரு பிரதான இரண்டாம் நிலைத் தரவாக எனது ஆய்வுக்கு பயன் பட்டுள்ளது.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம், (2004), "உள்ளூராட்சி மன்றங்களுக்கான அலுவலக நடைமுறைக்கோவை" எனும் நூலில் உள்ளூராட்சி மன்றங்களது தோற்றம், வளர்ச்சி தொடர்பாகவும் உள்ளூராட்சி மன்றங்களது கடமைகள், செயற்பாடுகள் தொடர்பாகவும் அவற்றின் முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பிரதேச சபை தொடர்பான விடயங்கள் எனது ஆய்விற்கு பகுதியளவில் உதவி உள்ளது.

மணிவாசகர், "உள்ளூராட்சி அரசாங்கம் ஒரு எண்ணக்கரு கண்ணோட்டம், 1994), - உள்ளூராட்சி மன்றங்களினது வரலாற்று ரீதியிலான பரிணாமவளர்ச்சி நிலை உள்ளூராட்சி மன்றங்கள் மக்களோடு அடிமட்ட நிலையில் தொழிற்படுபவையாகவும் மத்தியரசு, மாநில அரசுகளது செல்வாக்கிற்கு உட்பட்டதன்மை, உள்ளூராட்சி மன்றங்களது தொழிற்பாடுகள், அவை எதிர்நோக்குகின்ற சவால்கள், அதிகார ரீதியான பலவீனமான தன்மை மற்றும் எதிர்காலத்தில் எவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களினை அர்த்தமுள்ள அதிகார அமைப்புக்களாக மாற்றுதல் மற்றும் அதற்கான தேவை போன்றவற்றினை உதாரணங்கள் மற்றும் அறிஞர்களினது கருத்துக்களினை முன்நிறுத்தி விளக்கப்பட்டுள்ளது. இது இவ் ஆய்வுக்கான கோட்பாட்டு விளக்கத்திற்கு உதவியுள்ளது. இன்றைய சமூக விஞ்ஞான ஆய்வுகளில் கோட்பாட்டுப் பின்னணியும் கோட்பாட்டு ரீதியான நியாதிக்கங்களும் தனி முதன்மையானதாக உள்ளது. அந்த வகையில் இவ் ஆய்வின் பிரதான கோட்பாட்டு விளக்கங்களாக அதிகாரப் பரவலாக்கல் கோட்பாடு மற்றும் அபிவிருத்திக் கோட்பாடு என்பன ஆராயப்படுகின்றன.

அதிகாரப் பரவலாக்கக் கோட்பாடு :- "அதிகார பரவலாக்கம் என்பது அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்களை மத்திய அரசிடம் இருந்து மாநில அரசுகளுக்கு பகிர்ந்தளிப்பதாகக் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் மத்திய அரசின் அதிகாரச்சுமை குறைந்து மாநில அரசுகளிடம் பகிர்ந்தளித்து அடிமட்ட மக்களின் தேவைகளினையும் பூர்த்தி செய்யக் கூடியதாக பரவலாக்கப்படுகின்றது" (Smith,1985). இது உரியவகையில் நிர்வாக செயற்பாடுகளினை முன்னெடுக்கவும் உள்ளூர் மக்களது தேவைகளினை இனங்கண்டு உரிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கும் ஜனநாயக அம்சங்களினை சாதாரண பாமர மக்களும் அனுபவிப்பதற்கான ஒரு முயற்சியாகவே இது அமைகின்றது.

அதன் அடிப்படையில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதிகார பரவலாக்கம் பல்வேறு கட்டங்களாக நடைமுறையில் கொண்டு வரப்பட்டாலும் அதன் செயற்திறன் மற்றும் அரசியல் விளைவுகள் குறித்து தொடர்ந்தும் விவாதிக்கப்பட்டே காணப்படுகின்றது. அரசியல் பரவலாக்கம் முக்கியமாக நிர்வாக பரவலாக்கம், நிதி பரவலாக்கம் மற்றும் அரசியல் பரவலாக்கம் என முக்கிய மூன்று வடிவங்களில் செயற்படுத்தப்படுகின்றது. அதிகாரப் பரவலாக்கக் கோட்பாடு தொடர்பாக பல்வேறு அறிஞர்களும் பல்வேறு வகையாக வகைப்படுத்தி விளக்கியுள்ளனர். அந்த வகையில் "ரொண்டினெல்லி அதிகாரப் பரவலாக்கத்தை நான்கு வகைப்படுத்துகின்றார். அடித்தள அதிகாரப் பரவலாக்கம், பிரிவு அதிகாரப் பரவலாக்கம், அரசியல் அதிகாரப் பரவலாக்கம், தனியார்மயமாக்கல் என்பனவாக காணப்படுகின்றது" (Rondinelli, 1981).

அதிகாரப் பரவலாக்கக் கோட்பாட்டின் பிரதான நோக்கங்களாக கீழ்மட்ட மக்களுக்கு அதிகாரம் வழங்குதல், மக்கள் பங்களிப்பினை அதிகரித்தல், தீர்வு எடுப்பதில் மக்கள் செல்வாக்கு, வளங்களை இலக்கு சார்ந்த முறையில் பயன்படுத்துதல் என நோக்கங்களை கொண்டு காணப்படுகின்றது.

"இலங்கையில் அதிகார பரவலாக்கம் தொடர்பாக நோக்கும் போது முக்கிய முன்னேற்றமாக 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்படிக்கை மற்றும் 13 வது அரசிய

லமைப்பு திருத்தம் காணப்படுகின்றது" (Edrisinha, 2008). இது மாகாணசபை அமைப்பை உருவாக்கிமைய அரசாங் கத்தில் இருந்து மாகாண அரசாங்கங்களுக்கு சில நிர்வாக அதிகாரங் களை வழங்கும் முயற்சியாக இருந்தது. இது தமிழர் பிர தேசங்களில் உள்ள எதிர்ப்புகளை சமா ளிக்கவும் அரசியல் தீர்வுகளை உருவாக்கவும் வழி வகுத்தது எனலாம். எனினும் "மத்திய அரசின் தலையீடு மாகாண சபைகளில் அதிகமாகவே காணப்படுகின்றது. குறிப்பாக மாகாண ஆளுநர் மத்திய அரசினால் நிய மிக்கப்படுவதால் மாகாண சபையின் அதிகாரம் மத்திய அரசினால் தீர்மானிக் கப்படுகின்றது. மற்றும் மாகாணங் களுக்கு தன்னாட்சி நிதி இல்லாமல் மத்திய அரசுக்கு சார்பாகவே செயற்பட வேண்டி யுள்ளது போன்ற பல அதிகார கட்டுப்பாடுகள் மாகாண சபைக்கு காணப்படுகின்றது.

எனவே அதிகார பரவலாக்கக் கோட்பாடுகள் ஒரு ஜனநாயக நாட்டில் நிர்வாகத்தை மக் களுக்கு அருகில் கொண்டு செல்வதற்கான அடிப்படைக் கருவியாக அமைகின்றன. Rondinelli, Manor, Cheema போன்றோர் முன் வைத்த கோட்பாடுகள், அதிகார பரவலாக்கம் எவ்வாறு நடைமுறையில் செயற்பட வேண் டும் என்பதை தெளிவுபடுத்துகின்றன. இலங் கையின் அனுபவம், சட்டரீதியான மாற்றங் கள் இருந்தாலும், நடைமுறை சவால்கள் அதி கார பரவலாக்கத்தின் தீவிரத்தைக் குறைக் கும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

அபிவிருத்திக் கோட்பாடு :- அபிவிருத்தி என் பது இன்று அனைத்து துறையிலும் பிர யோகிக்கப்படும் சொல்லாகவும் தவிரக்க முடியாத அம்சமாகவும் அமைந்திருக்கிறது. குறிப்பாக அரசியல், பொருளியல், சமூக வியல் போன்ற அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி வெகுவாக பிரயோகிக்கப்படு கிறது. அபிவிருத்திப் பொருளியல் பற்றிய கருத்துக்கள் அடம்ஸ்மித் காலத்திலேயே முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை பொரு ளாதார ஆய்வுகளில் அபிவிருத்திக்கு முக்கி யத்துவம் வழங்கப்படவில்லை. இருந்த போதிலும் 1930 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார பெருமந்தத்தை தொடர்ந்து பேரினப் பொருளாதார ஆய்வுகளில் அபி விருத்தி சிந்தனைகள் இடம்பெற்றன. இந் நிலையில் இரண்டாம் உலக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளை அதிலிருந்து மீள கட்டியெழுப்ப "மார்ஷல் திட்டம்" கொண்டு வரப்பட்டது. இதன் அடிப்படையில் பல அபிவிருத்தி தொடர்பான கோட்பாடுகள் உருவாகின.

"அபிவிருத்தி என்கின்ற சொல்லானது பொரு ளாதாரத் தளத்திலேயே அதிகளவு பயன் படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய அரசுகளது தலா வருமானம், வாழ்க்கைத்தரம், கல்வி யறிவு மற்றும் ஆயுட்காலம் போன்ற பொரு ளாதார ரீதியான அபிவிருத்திக் குறிகாட்டி களினை அவற்றின் நிலையினை அடிப்படை யாகக் கொண்டு அபிவிருத்தியடைந்த நாடு கள் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடு கள் மற்றும் வறிய நாடுகள் போன்ற பிரிவுகள் பொருளாதார ரீதியாக உலக நாடுகளினால் பின்பற்றப்பட்டு வருகின்றன" (புஸ்பராஸ், 2011). எனவே "அபிவிருத்தி என்பது ஒரு நாட் டில் நிலவி வரும் நிலைமையின் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் ஏற்படும் சிறந்த மற்றும் அளவு ரீதியான மாற்றங்கள் அல்லது முன்னேற்றம் என கருத முடியும்" (ஹம்ஸா, 1995). இவ்வாறு அபிவிருத்தியினை யும் அதன் அளவுகோள்களினையும் விளங் கிக்கொள்ள முடியும்.

அபிவிருத்தி என்பது ஒரு இயக்கம் அல்லது ஒரு வளர்ச்சி ஆகும். சில ஒன்று சேர்க்கப் பட்ட அம்சங்களைக் கொண்டு ஒரு நிலை யில் இருந்து இன்னொரு நிலைக்கு செல்வ தாகும். "வில்னெர் (Willner, 1964), இ.டைவேட் சில்ஸ் (Ediward Shills) என்பவர்களின் கருத் துப்படி, அபிவிருத்தி என்பது ஒரு நிலை யில் இருந்து இன்னொரு நிலைக்கு இட்டுச் செல்வதாகும். அதாவது மரபிலிருந்து நவீ னத்துவத்தை நோக்கி இட்டு செல்வதாகும்" (புஸ்பராஸ், 2011). நவீனத்துவம் என்பதன் மூலம் கருதப்படுவது சமத்துவம் ஆகும். ஜனநாயகம், பொது நலத்துடன் ஒன்றிணைக் கப்பட்ட பிரதிநிதித்துவ ஜனநாயகம், நன்

மைக்கான பயிற்சி, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, பொருளாதார திட்டங்களும் செயன் முறைகளும், பகுத்தறிவு வாய்ந்த பொதுத் துறை நிர்வாகம் அத்துடன் தேசிய இறைமை மற்றும் உலக தரத்திலான நடிபங்கு என்பவற்றை குறித்து நிற்பதாகும். ஒரு அம்சத்தின் சீரான வளர்ச்சியை குறித்து நிற்கின்றது எனக் கொள்ளலாம்.

அபிவிருத்தி என்றால் என்ன என்பது தொடர்பாக அறிஞர்களும் நிறுவனங்களும் முன்வைத்த சில வரைவிலக்கணங்களை பின்வருமாறு நோக்கலாம்.

ஹேஸ்மன் (Hershman) - சமூக காரணிகளோடு ஏனைய காரணிகளையும் அடிப்படையாக கொண்டு அபிவிருத்தி பற்றிய கருத்துக்களை வெளியிட்டார். அவ் வகையில் இவர் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் வளர்ச்சி மாத் திரமன்றி பொருளாதார அபிவிருத்திக்கு அந் நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல்துறைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்கிறார்.

ஐஸ்டின் டயஸ் (Aistin Deyhesh) மற்றும் பாஸ்டர் (Pashter) – "அபிவிருத்தியில் பொருளாதார காரணிகளினதும் சமூக காரணிகளினதும் இணைப்பினை வலியுறுத்தி உள்ளனர். அதாவது பொருளாதார வளர்ச்சியும் மனித நல உரிமைகளும் ஒன்றினையும் போதே அபிவிருத்தி ஏற்படுவதாக கூறியுள்ளனர்" (ஹம்ஸா, 1995).

ஜக்கிய நாடுகள் சபை - முதலாவது அபிவிருத்தி தசாப்தம் (1961-1970) மக்களின் உடல், உள, வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் அபிவிருத்தி ஆகும். மூன்றாவது அபிவிருத்தி தசாப்தம் (1981-1990) அபிவிருத்தி என்பது சனத்தொகை, சமூக, கலாச்சார ஒழுக்க நெறி என்ற காரணிகளை உள்ளடக்கிய அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளாகும்.

யுனெஸ்கோ நிறுவனம் - ஒரு நாட்டில் பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும். சமூக அபிவிருத்தியானது உணவும் போசாக்கும், சுகாதாரம், கல்வி, வீடு, சமூக பாதுகாப்பு, உடை, பொழுதுபோக்கு, மனித சுதந்திரம் ஆகியவற்றால் ஏற்பட வேண்டும்.

எனவே அபிவிருத்தி தொடர்பாக தெளிவான வரையறையினை முன்வைக்க முடியாதாயினும் மேற்குறிப்பிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் அபிவிருத்தி என்பது மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுடன் தொடர்புடைய பல பரிமாணங்களை கொண்டமைந்த ஒரு எண்ணக்கரு என பொதுவாக விளங்கிக் கொள்ளலாம்.

மேலும் அபிவிருத்தியை அளவிடும் குறிகாட்டிகளை இரண்டு வகைப்படுத்தி நோக்கலாம்.

1.பொருளாதாரக் குறிகாட்டிகள்
2. சமூக நலக் குறிகாட்டிகள்

கோட்பாடு என்பது தோற்றப்பாடு தொடர்பான பொதுமையாக்கப்பட்ட உண்மைகளின் தொகுப்பாகும். அந்த வகையில் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறுபட்ட கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றினை பின்வருமாறு நோக்கலாம்.

பரிமாணக் கோட்பாடு
அமைப்பியல் - செயற்பாட்டுவாதம்
நவீனமயக் கோட்பாடு
பொருளியல் கோட்பாடு
மாக்ஸிசக் கோட்பாடு
அபிவிருத்தியின் வகைகளாக பின்வருவன காணப்படுகின்றன.
அரசியல் அபிவிருத்தி
பொருளாதார அபிவிருத்தி
சமூக அபிவிருத்தி
கலாசார அபிவிருத்தி
பண்பாட்டு அபிவிருத்தி

இதன் அடிப்படையில் அபிவிருத்திக் கோட்பாடானது இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் பிரதானமாக பயன்படுத்தப்படுகின்ற ஒரு கோட்பாடாக காணப்படுகின்றது. அந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்களினால் நடைமுறைப்படுத்துகின்ற சேவைகள் அடிமட்ட மக்களினைச் சென்றடைய கூடியவாறு அபிவிருத்தி செயற்பாடுகளானது அபிவிருத்தி கோட்பாட்டிற்கு அமைய முன்

னெடுத்து வருகின்றது. அதன் அடிப்படையில் அரசியல், சமூக, மற்றும் பொருளாதார ரீதியில் மக்களின் தேவையினை அறிந்து தமது வளங்களுக்கு உட்பட்ட வகையில் அபிவிருத்தி செயற்பாடுகளினை உள்ளூ ராட்சி மன்றங்கள் மேற்கொண்டு வருகின்றது எனலாம். அபிவிருத்தியின் தொடர்ச்சி தன் மையைப் பேணுதல், அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளுதல், வளப் பயன்பாட்டினை அதிகரித்தல், அபி விருத்தி திட்டங்களினை உருவாக்கும் அதிகாரத்தினை மேம்படுத்தல், கிராம மட் டத்திலான அபிவிருத்தி சமன்பாட்டினை ஏற்படுத்தல், பாரபட்சமற்ற அபிவிருத்தி, அபி விருத்தி செயற்பாடில் மக்களின் பங்கேற்பை அதிகரித்தல் போன்றவற்றினை கடைப்பிடிப் பதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களினால் மக்களின் தேவைகளை வினைத்திறனாக அபிவிருத்தி செய்து கொள்ள முடியும்.

**வலி தெற்கு பிரதேச சபை**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மாகாணத்தின் யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி அமைப்புக்களுள் ஒன்றாகும். வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அடங் கும் பகுதிகள் இப்பிரதேச சபைக்குள் அடங்குகின்றன. இப்பிரதேச சபையின் மொத்த விஸ்தீரணம் 30.01 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும்.

453/14ஆம் இலக்க 12.05.1987ம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய,

இதன் வடக்கில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையும்

கிழக்கில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையும்


தெற்கில் நல்லூர் பிரதேச சபையும்

மேற்கில் வலி.தென்மேற்கு பிரதேச சபையும் எல்லைகளாக உள்ளன.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைப் பகுதி யானது 18 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட் டுள்ளது. தெற்கே தாவடி தொடக்கம் வட கிழக்காக ஈவினை வரையாக பரந்துள்ள பிரதேசம் 51612 மக்கள் தொகையையும் உள்ளடக்கி 142 கிராமங்களைக் கொண்டு காணப்படுகின்றது. அத்துடன் J/182 தொடக் கம் J/211 வரையான 30 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாகும். இப் பிரதேச சபையில் தவிசாளர் உட்பட 30 உறுப் பினர்களும் விகிதாசார மற்றும் பட்டியல் முறையினை உள்ளடக்கிய கலப்புத் தேர்தல் முறையின் ஊடாக மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது சுகாதாரம், வீதிப்புனரமைப்பும் பராமரிப்பும்,

**வலி தெற்கு பிரதேச சபையின் அமைவிடம்**




(மூலம் - வலி தெற்கு பிரதேச சபை)

குடிநீர் வசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சந்தை வசதி, கல்வி, நூலகம் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளிலும் மக்கள் சுக வாழ்விற்கு வேண்டிய பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. சுன்னாகம், ஏழாலை, உடுவில் ஆகிய மூன்று உப அலுவலகப் பிரிவுகளினூடாகத் தனது செயற்பாடுகளைத் திறம்பட ஆற்றிவருகின்றது.

இலங்கை மின்சார சபை, விவசாயத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம், வங்கிகள், கல்வி வலயம், பொலிஸ் நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் தபாற்கந்தோர் ஆகியன இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் பங்கு கொள்கின்றன. இப்பிரதேச சபையின் மருதனார்மடம், சுன்னாகம் பொதுச்சந்தைகளானது யாழ் மாவட்டத்தின் முதற்தர சந்தைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான ஒரு முக்கிய மையமாகவும் சிறந்த போக்குவரத்து வசதிகளைக் கொண்ட அதாவது புகையிரத நிலையம் மற்றும் பஸ்தரிப்பு நிலையம் என்பவற்றின் மத்தியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்டிடத் திட்டமிடல் வரைபடங்களை அனுமதித்தல், காணி உப பிரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு செய்யும் அபிவிருத்தி திட்டங்களை அனுமதித்தல், அபிவிருத்தி அனுமதி பத்திரத்தின் செல்லுபடியான காலத்தை நீடித்தல், அடாத்தான நிர்மாணங்களுக்கு உள்ளடக்கிய ஒப்புதல் வழங்குதல், குடிபுகு அல்லது இயைபுச் சான்றிதழ் வழங்குதல், வீதி, கட்டிட வரையறை சான்றிதழ் வழங்குதல், உரிமை மாற்றிச் சான்றிதழ் வழங்குதல், பாதையை உடைப்பதற்கு அனுமதி கூறுதல், தகன சாலைகளை ஒதுக்குதல், விழா மண்டபங்கள் நகர மண்டபங்கள் சமூக நிலையங்களை வாடகைக்கு விடுதல், ஆதன வரி அறவிடுதல், வியாபார வரியை அளவிடுதல், கைத்தொழில் வரியை அறவிடுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கல் வாகனம் மற்றும் பொறிகளை வாடகைக்கு விடுதல், நீர் பவுசர் சேவைகளை வழங்குதல், வியாபார அனுமதி பத்திரங்களை வழங்குதல், மரங்களினால் ஏற்படுகின்ற ஆபத்தான நிலைமைகளை அகற்றுதல், கேளிக்கை வரியை அறவிடுதல் மற்றும் கேளிக்கை வரியிலிருந்து விலகளித்தல், விளம்பரங்களுக்கான அனுமதி வழங்குதல், சந்தை கடைகளை வாடகைக்கு விடுதல், சந்தை கடைகளை குத்தகைக்கு விடுதல், நடமாடும் வியாபார அனுமதி வழங்குதல், நடைபாதை வியாபார அனுமதி வழங்குதல், திண்மக்கழிவ கற்றல், கழிவு நீர் அகற்றல் போன்ற சேவை களை வலி தெற்கு பிரதேச சபையானது மேற்கொண்டு வருகின்றது.

**வலி தெற்கு பிரதேச சபையின் பொதுவான புள்ளிவிபரத் தகவல்கள்**

| | |
|---|---|
| மாகாணம் | வடக்கு மாகாணம் |
| மாவட்டம் | யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலர் பிரிவு | வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம், உடுவில் |
| தேர்தல் மாவட்டம் | யாழ்ப்பாணம் |
| பிரதேச சபையின் பெயர் | வலிகாமம் தெற்கு பிரதேச சபை. |
| பிரதேச சபையின் தபால் முகவரி | வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் |
| ஆரம்பித்த ஆண்டு | 1961 |
| சபையின் கீழ் இயங்கும் உப அலுவலகங்கள் | 1. சுன்னாகம் உப அலுவலகம் |
| | 2. உடுவில் உப அலுவலகம் |
| | 3. ஏழாலை உப அலுவலகம் |

| | | | |
|---|---|---|---|
| வலிகாமம் தெற்கு பிரதேசம் | விஸ்தீரணம் | கிராம அலுவலகர் எண்ணிக்கை | கிராமங்களின் எண்ணிக்கை |
| | 30.01 Sq.km | 30 | 142 |

| சனத்தொகை | 51384 | | | | |
|---|---|---|---|---|---|
| **குடியியல் விபரம்** | **மொத்தம்** | **தமிழ்** | **சிங்களம்** | **முஸ்லீம்** | **ஏனையோர்** |
| குடும்பங்களின் எண்ணிக்கை | **17269** | 17260 | 4 | 4 | 1 |
| ஆண்கள் எண்ணிக்கை | **25035** | 25024 | 4 | 5 | 2 |
| பெண்கள்எண்ணிக்கை | **26349** | 26340 | 0 | 6 | 3 |

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

| **மனித வளங்கள்** | | **பௌதீக வளங்கள்** | |
|---|---|---|---|
| தவிசாளர் | 1 | உழவு இயந்திரங்கள் | 5 |
| உப தவிசாளர் | 1 | Water Bowser | 3 |
| உறுப்பினர்கள் | 29 | Gully Bowser | 1 |
| செயலாளர் | 1 | | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 30 | | |
| முகாமைத்துவ உதவியாளர் | 23 | | |
| நூலகர் | 3 | | |
| நூலக உதவியாளர் | 5 | | |
| Labourers | 27 | | |
| Technical Officer | 4 | | |

| ஆதன விபரம் | ஆதனங்கள் இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டு | வட்டாரங்களின் எண்ணிக்கை | ஆதனங்களின் எண்ணிக்கை | வரி வீதம் |
|---|---|---|---|---|
| சுன்னாகம் உப அலுவலகம் | 2015 | 8 | 9055 | 14% |
| உடுவில் உப அலுவலகம் | 2015 | 12 | 10519 | 14% |
| ஏழாலை உபஅலுவலகம் | 2023 | 19 | 8687 | 15% |
| மொத்தம் | | 39 | 28261 | |
| வியாபார நிலையங்கள் | | சுன்னாகம் உப அலுவலகம் | | 711 |
| | | உடுவில் உப அலுவலகம் | | 614 |
| | | ஏழாலை உப அலுவலகம் | | 280 |
| | | மொத்தம் | | **1605** |
| பிரதேசசபைக்குச் சொந்தமான பொதுநோக்கு மண்டபம் (சங்குவேலி) | | 1 | | |
| பொதுச்சந்தைகள் | | 5 | | |
| பிரதேசசபைக்குச் சொந்தமான வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ள சந்தைக்கடைகள் | | 153 | | |
| தனியார் பஸ் நிலையங்கள் | | 1 | | |

| | |
|---|---|
| விடுதிகள் (தொழிலாளர்) | 7 |
| நூலகங்கள் | 3 |
| ஆயுர்வேத வைத்தியசாலை | 2 |
| விளையாட்டு மைதானம் | 2 |
| இந்து மயானம் | 11 |
| கிறிஸ்தவ சேமக்காலை | 8 |
| கொல்களம் | 1 |
| பொது மலசல கூடம் | 2 |
| பொது குழாய்க் கிணறுகள் | 20 |
| பொதுக் கிணறுகள் | 12 |
| சனசமூக நிலையங்கள் | 65 |
| முன்பள்ளிகள் | 48 |
| வங்கிகள் | 19 |
| காப்புறுதி நிறுவனம் | 8 |
| தங்குமிடம் | 9 |
| நகர மண்டபங்கள் கூட்டம் கூடும் நோக்கத்திற்கான மண்டபங்கள் | 5 |
| கல்வி வலயம் | 1 |

**(மூலம் - வலி தெற்கு பிரதேச சபை)**

**வலி தெற்த பிரதேச சபையின் சேவைகள் தொடர்பாக மக்களது எதிர்பார்ப்புகளும் திருப்தி மட்டங்களும்**

வலி தெற்கு பிரதேச சபையானது பல்வேறு சேவைகளினை வழங்கி வருகின்றது. அந்த சேவைகள் தொடர்பில் வலி தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மக்களது எதிர்பார்ப்பு களும் திருப்தி மட்டங்களும் எவ்வாறு காணப் படுகின்றது என்பது தொடர்பாக நான் மேற் கொண்ட வினாக்கொத்தினை அடிப்படை யாகக் கொண்டு அவர்களது திருப்தி மட்டங் களை அறியக்கூடியதாக உள்ளது. அந்த வகை யில் வலி தெற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட 30 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட மக்களின் திருப்தி மட்டங்களினை 100 மக்களிடம் எழு மாற்றாக வழங்கப்பட்ட வினாக் கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

வலி தெற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட மக் களிடம் பிரதேச சபையினால் வழங்கப்படு கின்ற முக்கிய பதினைந்து சேவை களினை அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத் தானது தயாரிக்கப்பட்டது. அதன் அடிப் படையில் முதலாவதாக வரைபடம் - 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பில் மக்களை அறிந்துள்ளீர்களா என்று வினாவப்பட்டது. இதற்கு வலி தெற்கு பிரதேசமக்கள் 30% ஆனவர்கள் முழுமையாக அறிந்துள்ளேன் எனவும் 60% ஆனவர்கள் அறிந்துள்ளேன் எனவும் 10% ஆனவர்கள் மிகக் குறைந்தளவு அறிந்துள்ளேன் எனவும் அறிந்திருக்கவில்லை என யாரும் குறிப்பிட வில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக மக்கள் மேலும் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டிய கடப்பாடு கொண்டுள்ளனர் என்ற முடிவிற்கு வரலாம். இதனை இவ் வரைபில் நோக்கலாம்.

**வரைபடம் - 1**




மூலம் - ஆய்வாளனினால் பெறப்பட்ட வினாக் கொத்து தரவுகள் - 2024

### ஆதனவரி செலுத்தல்

பொதுமக்கள் அனைவரும் தமது ஆதனங் களுக்கான வரிகளை செலுத்துவது மிகவும் கட்டாயமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ் ஆதனவரியானது பிரதேச சபைகளது முதன்மை வருமான ஆதாரமாகச் செயற் படுகின்றது. அந்தவகையில் வலி தெற்கு பிர தேச சபையினால் வருடாந்தம் உடைமை களுக்கான ஆதனவரியானது அறவிடப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் வலி தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மக்கள் ஆதனவரியினை 60% ஆனவர்கள் செலுத்து வதாகவும் 40% ஆனவர்கள் செலுத்தவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். அதற்கான கார ணம் என்னவென்று நோக்கும் போது அது தொடர்பான போதிய அறிவின்மை என்றும் அது கட்டாயம் செலுத்த வேண்டும் என்று தெரியாமை ஆகிய காரணங்களால் அவர்கள் செலுத்தவில்லை என்றும் குறிப்பிடுகின்ற னர். எனினும் பிரதேச சபைகளுக்கான பிர தான நிதி மூலங்களில் ஆதனவரி பிரதான ஒன்றாகவுள்ளது. மக்கள் தங்கள் ஆதன வரிகளைச் செலுத்தும் போது அவர்களின் முக்கிய எதிர்பார்ப்புகளாக, சேவை தரம் உயர்வது, வரி வசூலில் வெளிப்படைத் தன்மையினை நிலைநிறுத்தல், தீர்மானங் களில் மக்கள் பங்குபற்றுதல், ஊழல் இல் லாத நிர்வாகம், சமூக சமநிலை, விரை வான சேவை வழங்கல் ஆகியவை காணப் படுகின்றன. இத்தகைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக பிரதேச சபைகள் தங்கள் நிர்வாக திறனை மேம்படுத்தி, மக்களின் நலனுக்கான திட்டமிடல் மற்றும் சேவை வழங்கலில் நியாயத்தையும் வெளிப் படைத்தனமையையும் கடைப்பிடிக்க வேண் டும். இதன் மூலம் மக்களிற்கும் பிரதேச சபைகளிற்கும் இடையே ஒரு பரஸ்பர நம்பிக்கை உறவு நிலையாக உருவாகிறது.

### குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல்

மக்களிடம் மேற்கொண்ட வினாக்கொத் தின் மூலம் வரை படம் - 2 இல் காட் டப்பட்டுள்ளவாறு உமது பிரதேசத்தில் நீர்தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளதா என்ற வினாவிற்கு 55% ஆனவர்கள் ஆம் என்றும் 45% ஆனவர்கள் இல்லையென்றும் பதிலளித்துள்ளனர். அவ்வாறு நீர்தாங்கிகள் வைத்து காணப்பட்டால் நீர் நிரப்பப்படு கின்றதா என்ற வினாவிற்கு 73% ஆனவர் கள் ஆம் என்றும் 27% ஆனவர்கள் இல்லை யென்றும் பதிலளித்துள்ளனர். வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற இந் தக் குடிநீர் வழங்கும் சேவையை பெற்றுக் கொள்வதில் உமது மனோநிலை எத்தகை யது என்பதற்கு 7% ஆனவர்கள் மிகத் திருப்தி என்றும் 36% ஆனவர்கள் திருப்தி என்றும் 23% ஆனவர்கள் ஓரளவு திருப்தி என்றும் 34% ஆனவர்கள் திருப்தி இன்மை என்றும் குறிப்பிட்டுள்ளனர். இந்த வலி தெற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற குடிநீர் சேவையானது திருப்தியின்மைக்கான கார ணங்களாக குடிநீர் தாங்கிகள் சுத்தப்படுத் தாமை, தினம்தோறும் நீர் நிரப்பப் படாமை, குடிநீர் தாங்கிகள் தொலைவில் காணப்படுகின்றமை போன்ற காரணங் களினை மக்கள் முன்வைத்துள்ளனர். இதனை இவ் வரைபில் நோக்கலாம். குடிநீர் வழங்கும் சேவையானது ஆரம்பத்தில் பிர தேச சபைகளிடம் முழுமையாகக் காணப்பட் டது. ஆனால் நடைமுறையில் அதன் அதிகாரங் கள் குறைக்கப்பட்டு சிறிதளவிலான சேவை யினையே வழங்கி வருகின்றது. எனினும் அந்த சேவைகள் தொடர்பாக மக்களது தேவை கள் எவையென அறிந்து அவற்றை நிறைவேற் றுவதனால் மக்களின் முழுமையான திருப்தி நிலையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வரைபடம் - 2




மூலம் - ஆய்வாளனினால் பெறப்பட்ட வினாக் கொத்து தரவுகள் - 2024

### கழிவகற்றல் செயன்முறை

கழிவகற்றல் செயன்முறை என்பது வீடுகள், வணிக இடங்கள் மற்றும் பொது இடங்களில் உருவாகும் கழிவுகளை முறையான விதத்தில் அகற்றும் செயன்முறையாகக் காணப்படுகின்றது. கழிவகற்றல் செயன் முறையை முறையாக மேற்கொள்வதனால் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதுடன் நோய் தொற்றுக்களைத் தடுத்து சுற்றுப்புறச் சூழலையும் தூய்மையாக வைத்திருக்க முடியும். அந்தவகையில் வலி தெற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற நாளாந்த கழிவகற்றல் செயன்முறை தொடர்பில் நோக்கும் போது ஒரு சில மக்களே திருப்தி கொள்ளுகின்ற நிலை காணப்படுகின்றது. அதாவது கழிவகற்றல் செயன்முறையானது வலி தெற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டாலும் ஓரிரு பகுதியில் திறம்பட மேற்கொள்ளப்படவில்லை. மக்கள் இந்த சேவையினை மேலும் எதிர்பார்ப்பதோடு வீதி, தெருக்களை சுத்தப்படுத்தல் மற்றும் நாளாந்த கழிவற்றல் போன்றவற்றினை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அந்த வகையில் வினாக் கொத்தின் பகுப்பாய்வின் அடிப்படையில் வலி தெற்கு பிரதேச மக்கள் கழிவகற்றல் செயன் முறை தொடர்பில் 10% ஆனவர்கள் மிக திருப்தியனையும் 45% ஆனவர்கள் திருப்தி நிலையினையும் 30% ஆனவர்கள் ஓரளவு திருப்தியினையும் 15% ஆனவர்கள் திருப்தியின்மையினையும் குறிப்பிட்டுள்ளனர். அந்த வகையில் வலி தெற்கு பிரதேச மக்கள் கழிவகற்றல் செயன்முறை தொடர்பில் மேலும் எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளனர். குறிப்பாக நகரப்புறங்களில் கழிவகற்றல் செயன் முறையானது திருப்திகரமாக அமைந்து காணப்பட்டாலும் கிராமப்புறங்களில் தினந் தோறும் இந்த கழிவகற்றல் செயன்முறையானது முறைப்படி மேற்கொள்ளப்படாமை குறிப்பிடத்தக்கது. இதனால் மக்கள் கழிவகற்றல் சேவையில் மேலும் எதிர்பார்ப்புடன் காணப்படுகின்றனர். அதாவது தினசரி மற்றும் நேரம்சார்ந்த கழிவகற்றல், சுத்தமான சுற்றுப்புறம், கழிவுகள் பிரித்து சேகரித்தல், மறு சுழற்சி மற்றும் உரமிடல், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தல் என்பனவாகக் காணப் படுகின்றது. இத்தகைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு, பிரதேச சபைகள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மறு சுழற்சி நிலையங்கள் அமைத்து, மக்கள் பங்குபற்றலை ஊக்குவிக்கும் திட்டங்கள் மூலம் செயல்பட வேண்டும். மேலும், ஊழியர் திறன் மேம்பாடு, சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள், மற்றும் வெளிப்படையான கண் காணிப்பு முறைமைகள் அவசியம் கடைப் பிடிக்கப்படவேண்டும்.

### நூலக சேவைகள்

நூலக சேவை என்பது பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்ற பல தரப்பினருக்கும் கல்வி மற்றும் அறிவுத் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு அமைப்பாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் புத்தகங்கள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள், இதழ்கள், கையேடுகள், மற்றும் டிஜிட்டல் வளங்கள் போன்றவை சேமித்து வைக்கப்பட்டு பொதுப் பயன்பாட்டிற்கு வழங் கப்படும் ஒரு அறிவுக் களஞ்சியமாகக் கருதப் படுகிறது. அந்தவகையில் இச்சேவையானது அறிவைப் பரப்பும் ஊடகமாகவும், மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உபயோகிக் கக்கூடிய நம்பகமான தகவல் ஆதாரங்களை வழங்குவதன் மூலமும், வாசிப்புப் பழக் கத்தையும் அறிவுத்திறனையும் வளர்ப்பதன் மூலமும் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த வகையில் வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வருகின்ற சேவைகளில் நூலக சேவையும் குறிப்பிடத்தக்கது. அதன் அடிப் படையில் நூலக சேவையினை மக்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் பெறப் பட்ட தரவுகளினை பகுப்பாய்வின் மூலம் நோக்கும் போது 15% ஆனவர்கள் மிக திருப்தியினையும் 50% ஆனவர்கள் திருப்தியினையும் 43% ஆனவர்கள் ஓரளவு திருப்தியினையும் 2% ஆனவர்கள் திருப்தியின்மையினையும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் நோக்குகின்ற போது வலி தெற்கு பிரதேசமானது 142 கிராமங்களை கொண்டு காணப்படுகின்றது. ஆனால் சுன் னாகம், ஏழாலை, உடுவில் ஆகிய பிர

தேசங்களிலேயே பொது நூலகங்கள் காணப் படுகின்றது. இதனால் மக்கள் தமது சேவை யினை பெற்றுக் கொள்வதில் இடர்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக சுன்னாகம், ஏழாலை, உடுவில் பகுதிகளில் உள்ள மக் கள் திருப்தியினை பெற்றுக் கொண்டாலும் ஏனைய பகுதி மக்கள் தமது சேவை யினை பெறுவதில் இடர்களையே எதிர்நோக்கு கின்றனர். இதனால் இந்த நூலகங்களை விஸ் தரிப்பதன் ஊடாகவோ அல்லது குறிப்பிட்ட சில பகுதிகளை மையமாகக் கொண்டு நூல கங்களை புதிதாக ஆரம்பிப்பதன் மூலமா கவோ இவற்றினை தவிர்த்துக் கொள்ள முடி யும்.

#### ஆயுள்வேத சேவைகள்

ஆயுள்வேதம் என்பது பாரம்பரியமாகப் பின் பற்றப்படும் மருத்துவ முறையாகக் காணப் படுகின்றது. இது இயற்கை மூலிகைகள் மற்றும்வாழ்க்கைமுறையைஅடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறையாகக் காணப்படு கின்றது. வலி தெற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற மற்றுமொரு சேவை யாக ஆயுள்வேத சேவை காணப்படுகின்றது. இந்த ஆயுள்வேத சேவை தொடர்பாக மக் களின் பகுப்பாய்வை நோக்கும் போது மிகத் திருப்தியாக 5% ஆனவர்களும் திருப்தியாக 40% ஆனவர்களும் ஓரளவு திருப்தியாக 45% ஆனவர்களும் திருப்தி இன்மையாக 10% ஆனவர்களும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக ஆயுள்வேதசேவையானதுஏழாலை,உடுவில் ஆகிய பகுதிகளிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் 142 கிராமங்களை கொண்ட மக்கள் முழுமையாக ஆயுள்வேத சேவையை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் ஆயுள் வேத வைத்தியசாலைகளை விஸ்தரிப்பதன் மூலமும் புதிய ஆயுள்வேத வைத்தியசாலை களை அமைப்பதன் மூலமும் இதனை தவிர்த்து கொள்ளலாம்.

#### வீதிகள் மற்றும் கால்வாய்கள் பராமரிப்பு சேவைகள்


வீதிகள் மற்றும் கால்வாய்கள் பராமரிப்பு சேவை என்பது மக்கள் தினசரி பயன்பாட்டில் இருக்கும் சாலை, வழித்தடங்கள் மற்றும் நீர்த்தேக்கக் கால்வாய்களை பழுதில்லாமல் பாதுகாப்பதும், அவற்றை சீரமைப்பதும் ஆகும். இச் சேவையினை சிறப்பாக மேற் கொள்வதன் மூலம் மக்களின் போக்கு வரத்து வசதியை மேம்படுத்த முடிகின்றது, மழைக்காலங்களில் வெள்ளப் பாதிப்பை தடுக்க உதவுகின்றது, பொதுசுகாதாரத்தை யும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க உதவு கிறது, மற்றும் நகர மற்றும் கிராமத் திட்ட வளர்ச்சிக்கான அடித்தளமாக அமைகின்றது. அதனடிப்படையில் வலி தெற்கு பிரதேச சபை யினால் பராமரிக்கப்படுகின்ற வீதிகள் மற்றும் கால்வாய்கள் தொடர்பான பராமரிப்பு சேவை கள் தொடர்பில் மக்களது மனோநிலை யானது ஓரளவு திருப்தியானதாகவே காணப் படுகின்றது. அதாவது அவர்களிடம் மேற் கொண்ட வினாக்கொத்தின் அடிப்படையில் மிக திருப்தியாக 15% ஆனவர்களும் திருப் தியயாக 20% ஆனவர்களும் ஓரளவு திருப்தி என 60% ஆனவர்களும் திருப்தியின்மை யென 5% ஆனவர்களும் குறிப்பிடுகின்றனர். அதாவது உள்ளூர் வீதிகள் சில புனர மைக்கப்படாமையினால் அங்கு வீதி விபத் துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப் படுகின்றது.மேலும்கால்வாய்கள்தொடர்பாக நோக்குகின்ற போது கால்வாய்கள் சுத்தி கரிப்பானது மேற்கொள்வதற்கு போதுமான இயந்திரங்கள் இன்மை, கால்வாய்களில் நீர் தேங்குவதால் நோய் தொற்றுகள் ஏற்படு கின்றமை மற்றும் அதி கூடிய சுத்தப்படுத்தல் போன்றவை காணப்படவில்லை. இதனால் மக்கள் இன்னல்களை எதிர்நோக்குவதோடு இது தொடர்பாக மக்களிடம் ஓரளவு திருப்தி நிலையே காணப்படுகின்றது. இதனால், மக் கள் தங்கள் பிரதேச சபைகளிடம் தரமான, சீரான மற்றும் நிலைத்த பராமரிப்பு சேவையை எதிர்பார்க்கின்றனர். அந்த எதிர் பார்ப்பை நிறைவேற்றுவதற்கு பிரதேச சபைகள் திட்டமிட்ட பராமரிப்பு திட்டங்கள், தொழில்நுட்பப் பயன்பாடு, நிதி வெளிப் படைத்தன்மை, ஊழியர் திறன் மேம்பாடு, மற்றும் மக்கள் பங்குபற்றல் போன்ற பல் வேறு வழிமுறைகளை மேற்கொள்ள வேண் டும். மேலும், மழைக்காலத்துக்கு முன் கால் வாய்களை சுத்தம் செய்தல், சாலைகளில்

நீர் தேங்காதவாறு வடிகால் அமைப்புகளை பராமரித்தல் போன்றவற்றை நடைமுறைப் படுத்துதல் அவசியமாகும்.

**சேதனைப் பசளை உற்பத்தி**

சேதனைப் பசளை உற்பத்தியென்பது இயற்கை வள கழிவுப்பொருட்களைக் கொண்டு இயற்கையாகத் தயாரிக்கப்படும் பசளையே சேதனைப் பசளையாகும். வலி தெற்கு பிரதேச சபையினால் சேதனைப் பசளை உற்பத்தியானது ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. இந்த சேதனைப் பசளை தயாரிப்பானது எல்லா பிரதேச சபைகளாலும் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆனால் வலி தெற்கு பிரதேச சபையினால் மேற்கொள் ளப்படுவது ஒரு சிறப்பிற்குரிய விடயமாகும். அதன் அடிப்படையில் மக்கள் மத்தியில் இதன் கண்ணோட்டத்தை நோக்கும் போது திருப்தி நிலையாக 35% ஆனவர்களும் ஓரளவு திருப்தியாக 55% ஆனவர்களும் திருப்தியின்மையென 10% ஆனவர்களும் குறிப்பிடுகின்றனர். இதன் அடிப்படையில் வலி தெற்கு பிரதேச சபை சேதனைப் பசளை உற்பத்தியை மேற்கொண்டு வந்தாலும் அதற்கான போதிய ஆளணியினர் மற்றும் போதிய பௌதீகவளங்கள் காணப்படாமையினால் அந்த சேவையினை திறம்பட மேற்கொள்ள முடியவில்லை. இதனாலேயே மக்கள் மத்தியில் இச் சேவையின் மிகத்திருப்தி நிலையானது குறைவாக காணப்படுகின்றது எனலாம். பிரதேச சபைகள் இதனை மேம் படுத்த நவீன தொழில்நுட்பம், திறமையான மேலாண்மை, மக்களின் பங்குபற்றல், நிதி ஒழுங்கு மற்றும் சுற்றுச்சூழல் கல்வி ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயல்பட வேண் டும். இவ்வாறு செயல்பட்டால் சேதனைப் பசளை உற்பத்தி நிலையங்கள் சுயநிதி அடிப் படையில் இயங்கும் நிலையை அடைந்து, சுத்தமான மற்றும் பசுமையான சூழலை உருவாக்கும்.

**வரைபடம் - 3**




மூலம் - ஆய்வாளனினால் பெறப்பட்ட வினாக்கொத்து தரவுகள் - 2024

**சந்தை தொடர்பான சேவைகள்**

வலி தெற்கு பிரதேச சபையினால் மேற் கொள்ளப்படுகின்ற சேவைகளில் சந்தை வசதி வாய்ப்புக்களினை ஏற்படுத்திக் கொடுத்தல் சேவையானது மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் சுன்னாகம் மற்றும் மருதனார்மடம் ஆகிய இடங்களில் பொதுச்சந்தையானது காணப் படுகின்றது. இந்த பொதுச் சந்தை வசதிகள்

தொடர்பாக மக்களிடம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மிக திருப்தியாக 12% ஆனவர்களும் திருப்தியென 45% ஆனவர்களும் ஓரளவு திருப்தி என 33% ஆனவர்களும் திருப்தியின்மையென 10% ஆனவர்களும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக மிகப் பரந்த பிரதேசமாக வலி தெற்கு பிரதேச சபை காணப்படுகின்ற போதும் பொதுச் சந்தைகள் இரண்டு மட்டுமே காணப்படுகின்றன. உள்ளூர் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு சந்தை வசதிகள் காணப்படவில்லை. அவர்கள் சந்தை சேவையில் ஈடுபட வேண்டும் எனில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. மேலும் பொது சந்தைகள் தூய்மையுடன் இருக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதனால் உள்ளூர் கிராம மக்கள் சந்தை சேவை தொடர்பாக இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

**பொது இந்து மயானங்கள் மற்றும் சேமக்காலைகள் முகாமைத்துவம்**

பொது இந்து மயானங்கள் மற்றும் சேமக்காலைகள் முகாமைத்துவம் என்பது இறந்தோர் உடல்களை மரியாதையாக தகனம் செய்யும் இடங்களை பிரதேச சபைகள் நிர்வகித்து, பராமரிக்கும் செயற்பாடாகும். வலி தெற்கு பிரதேச சபையினால் பொது இந்து மயானங்கள் மற்றும் சேமக்காலைகள் பராமரித்து முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகின்றது. இவை தொடர்பில் மக்களது மனோநிலையானது மிக திருப்தியென 40% ஆனவர்களும் திருப்தி என 45% ஆனவர்களும் ஓரளவு திருப்தி என 10% ஆனவர்களும் 5% ஆனவர்கள் திருப்தியின்மை எனவும் குறிப்பிட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட தரவுகளின் அடிப்படையில் பொது மயானங்களின் பராமரிப்பு சிறப்பாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பொது மலசலகூடங்களை பராமரித்தல்**

வலி தெற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சேவைகளில் பொது மலசலகூடங்களைப் பராமரித்தல் தொடர்பான சேவையினையும் மேற்கொள்கின்றது. அதனடிப்படையில் வலி தெற்கு பிரதேசத்தில் சுன்னாகம் மற்றும் மருதனார்மடம் பொதுச் சந்தைகளோடு இணைந்தவாறு பொது மலசலகூடமானது காணப்படுகின்றது. இச் சேவையினை பெறுவதில் மக்கள் மனநிலையானது மிக திருப்தியென 2% ஆனவர்களும் திருப்தி என 48% ஆனவர்களும் ஓரளவு திருப்தியாக 35% ஆனவர்களும் திருப்தின்மையாக 15% ஆனவர்களும் குறிப்பிடுகின்றனர். இந்த சேவையினை வலிதெற்கு பிரதேச சபை மேற்கொண்டு வந்தாலும் மலசலகூடங்களினை சிறப்பாக பராமரிக்கின்ற நபர்களுக்கு குத்தகைக்கு விடுவதன் மூலம் அவற்றினை தூய்மையாக பேணிக்கொள்ள முடியும். தூய்மையை பேணுவதன் மூலம் மக்கள் திருப்தி நிலை அடைந்து கொள்வார்கள்.

**கட்டாகாலி நாய்களின் தொந்தரவுகள் மற்றும் இடையூகளினைக் கட்டுப்படுத்தல்**


கட்டாகாலி நாய்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் வலி தெற்கு பிரதேச சபையானது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் அடிப்படையில் நாய்களுக்கு ஊசி போடுதல், பதிவு செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் அடிப்படையில் வலி தெற்கு பிரதேச மக்கள் கட்டாகாலி நாய்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஓரளவு திருப்தி நிலையினை கொண்டு காணப்படுகின்றனர். அதன் அடிப்படையில் இச் சேவையினை பெறுவதில் மக்கள் மனநிலையானது மிக திருப்தியென 30% ஆனவர்களும் திருப்தி என 35% ஆனவர்களும் ஓரளவு திருப்தியாக 28% ஆனவர்களும் திருப்தின்மையாக 7% ஆனவர்களும் குறிப்பிடுகின்றனர்.

**கொல்களன்கள் தொடர்பான சேவை**

வலி தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குள் கொல்களன்கள் தொடர்பான சேவையும் மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது எல்லா பிரதேச சபைகளினால் கொல்களச் செயற்பாடானது மேற்கொள்ளப்படமாட்டாது. குறிப்பாக வலி தெற்கு பிரதேச சபையினால் இந்த சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் இந்த கொல்களச் செயற்பாட்டில் மக்கள் ஓரளவு திருப்தி

நிலையுடனேயே காணப்படுகின்றனர். ஏனெனில் இந்த கொல்களனின் சுகாதார நிலை தொடர்பாக அச்சம் கொள்கின்றனர். இதற்கென தனியானதொரு இடம் காணப்படாமை இதற்கு முக்கிய காரணமாக காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் இச் சேவையினை பெறுவதில் மக்கள் மன நிலையானது மிக திருப்தியென 3% ஆனவர்களும் திருப்தி என 25% ஆனவர்களும் ஓரளவு திருப்தியாக 47% ஆனவர்களும் திருப்தின்மையாக 25% ஆனவர்களும் குறிப்பிடுகின்றனர். இதனால் இச்சேவையினை மேலும் திறம்பட மேற்கொள்வதற்கு கொல்களத்திற்கு என தனியானதொரு இட வசதியினை ஏற்படுத்தி சுகாதார வசதிகளுடன் மேற்கொள்வதன் மூலம் இச்சேவை தொடர்பாக மக்கள் திருப்தியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.


**வரைபடம் - 4**




மூலம் - ஆய்வாளனினால் பெறப்பட்ட வினாக்கொத்து தரவுகள் - 2024

எனவே தொகுத்து நோக்கும் போது மேற்குறிப்பிட்ட வலி தெற்கு பிரதேச சபையினால் பிரதானமாக வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக மக்களிடம் கேட்கப்பட்ட வினாக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அச் சேவைகள் தொடர்பாக மக்கள் முழுமையான திருப்தி நிலையினைக் கொண்டு காணப்படவில்லை. குறிப்பாக வரைபடம் - 5 இன் பிரகாரம் 5% ஆனவர்கள் மிகதிருப்தி எனவும் 27% ஆனவர்கள் திருப்தி எனவும் 61% ஆனவர்கள் ஓரளவு திருப்தி எனவும் 7% ஆனவர்கள் திருப்தியின்மை எனவும் குறிப்பிடுகின்றனர். இதனைப் பின்வரும் வரைபில் நோக்கலாம்.

**வரைபடம் - 5**




மூலம் - ஆய்வாளனினால் பெறப்பட்ட வினாக்கொத்து தரவுகள் - 2024

இதன் அடிப்படையில் வலி தெற்கு பிரதேச சபையானது தமது சேவைகளை சிறப்பான முறையில் வழங்குகின்ற போதிலும் மக்கள் அவ் சேவைகள் தொடர்பாக மேலும் எதிர் பார்ப்புகளை வைத்துள்ளனர். இந்த எதிர் பார்ப்புகளை தீர்த்துக் கொள்வதற்கு வலி தெற்கு பிரதேச சபையின் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதன் மூலமும் அவ் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதன் மூலமும் வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளை மேலும் மேம்படுத்த முடியும்.

முடிவுரை

உள்ளூராட்சிக் கட்டமைப்பில் வலி தெற்கு பிரதேச சபையானது பிரதேச சபைகள் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டு தொழிற்பட்டு வருகின்றது. இவ் வலி தெற்கு பிரதேச சபையானது, இலங்கையில் உயர்தரத்திலான சேவைகளை யும் உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட உள்ளூராட்சி அமைப்பாக விளங்குதல் எனும் தொலைநோக்கினை கொண்டு செயற் பட்டு வருகின்றது. வலி தெற்கு பிரதேச சபையானது சுன்னாகம் உப அலுவலகம், உடுவில் உப அலுவலகம், ஏழாலை உப அலுவலகம் என மூன்று உப அலுவலகங் களின் மூலம் தனது சேவையை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

இவ் உள்ளூராட்சி மன்றங்கள் பாராளுமன்ற சட்டங்களினால் உருவாக்கப்பட்ட கட்டமைப் பாக காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட அதிகார வரையறைகள், வளங்களின் மட் டுப்பாடுகளுக்கு உட்பட்டு தொழிற்பட்டு வருகின்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனினும் இலங்கையின் உள்ளூ ராட்சி மன்றங்களினை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பாக பிரித்தானியா, பிரான்ஸ் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் அதிகாரங்கள் குறைவாக காணப்படுகின்றது. குறைவான அதிகாரங்களைக் கொண்டு குறிப்பிட்ட பிரதேச மக்களின் சேவையை வழங்குவது சவால் மிக்க ஒன்றாக காணப் படுகின்றது. ஆனாலும் இவ் வலி தெற்கு பிரதேச சபையானது மக்கள் பணியை தமது வளங்களுக்கும் அதிகாரங்களுக்கும் உட்பட்ட வகையில் வினைத்திறனாக செயற் படுத்தி வருகின்றது. இருந்த போதும் இவை மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யாத நிலையே காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் சேவை தொடர் பாக மக்கள் ஓரளவு திருப்தி நிலையிலேயே காணப்படுன்றனர். இதற்கு மத்திய அரசு உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளில் மட்டுப்பாடு வழங்கியமை பிரதான காரண மாக காணப்படுகின்ற போதும் வலி தெற்கு பிரதேச சபையானது மக்களின் தேவை களை முழுமையாக அறிந்து தனது சேவை களை வழங்குவதன் மூலம் மக்களின் திருப்தி நிலையினைப் பெற்றுக்கொள்ள முடியுமெனலாம்.

ஆரம்பத்தில் பிரதேச சபைகளிடம் காணப் பட்ட அதிகாரங்கள் தற்பொழுது குறைக் கப்பட்டு பிரதேச செயலகங்கள், மின்சார சபை, நீர் வடிகால் அமைப்பு, கல்வி திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், விலைமதிப்பீட்டு திணைக்களம் போன்ற பல அமைப்புகள் அதன் சேவையைப் பிரித்தெடுத்து தாம் பணியாற்றுகின்றன. இதன் மூலம் பிரதேச சபைகளினுடைய சேவை வழங்கலானது குறைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வலி தெற்கு பிரதேச சபையானது தனது நோக்கத்திற்கு அமைய அதன் சேவை வழங்கல் எவ்வாறான தன்மையினை கொண்டுள்ளது என்பது பற்றியும் அவ் சேவைகள் எவ்வாறாக நடை முறைப்படுத்தப்படுகின்றது தொடர்பாகவும் அவ்வாறுசேவைகளைநடைமுறைப்படுத்தும் போது அவற்றின் மீதான மக்களின் திருப்தி மட்டங்கள் எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பாகவும் வலி தெற்கு பிரதேச சபையானது எதிர்காலத்தில் எவ்வாறான சேவைகளை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பாகவும் இவ் ஆய்வுக்கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

எனினும் வலி தெற்கு பிரதேச சபையானது நடைமுறையில் மக்களுக்கு பல்வேறான சேவைகளினை சிறப்பாக வழங்கி வரு கின்ற போதிலும் பல சவால்களுக்கு முகம்

கொடுத்து அவற்றின் மத்தியிலேயே அச் சேவைகளினை நடைமுறைப்படுத்த வேண்டிய சூழல் காணப்படுகின்றது. இதனால் வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் சேகரிக்கப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது மக்கள் முழுமையான திருப்தி நிலையில் காணப்படவில்லை என்ற முடிவிற்கு வரலாம். எனவே இவ் ஆய்வின்படி வலி தெற்கு பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் குறித்த பிரதேச மக்களுக்கு போதுமானவையாகவும் அவர்களினை திருப்திப்படுத்த கூடியதாகவும் அமையவில்லை. எனவே வலி தெற்கு பிரதேச சபையானது பல்வேறு வகையான சேவைகளினை வழங்குகின்ற போதும் அவை மக்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்பது பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள், தரவுகள் மற்றும் பகுப்பாய்வின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


அபயவர்த்தனா, எச். ஏ. பி. (2004). பிரதேச சபை சேவைகள். கொழும்பு: சரசவி பதிப்பகம்.

அபேரத்ன, உ. (2007). உள்ளூராட்சி நிறுவனங்கள். கொழும்பு: மாற்று கொள்கைகளுக்கான நிலையம்.

உள்ளூர் ஆளுகை நிறுவகம். (2004). உள்ளூராட்சி மன்றங்களுக்கான அலுவலக நடைமுறைக் கோவை 2004. கொழும்பு.: இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்.

பிரசாத், சி. (2016). இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு - 1978. சென்னை: தாயகம் பதிப்பகம்.

புஞ்சிஹேவா, எஸ். ஜு. (2007). உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளின் நடை முறைகள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகள். கொழும்பு: மாற்று கொள்கைகளுக்கான நிலையம்.

புஸ்பராஸ், சி. (2011). அரசியல் சமூகவியல். கொழும்பு: காயத்திரி பப்ளிக்கேஷன்ஸ்.

மணிவாசகர், அ. வே. (1994). உள்ளூராட்சி அரசாங்கம்: ஒரு கண்ணோட்டம். சிந்தனைத் தொகுதி, VI (I–II), 1-10.

சௌந்தர்ராஜன்.க. ரூ விஜயகுமார்.பா. (2006). வலிகாமம் தெற்கு பிரதேச சபை உள்ளாட்சி வார சிறப்பு மலர் 2005. யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை. (2012). உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொது மக்கள் முறைப்பாடு விசாரணைகள். கொழும்பு: டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா.

விக்னேஸ்வரன், ரீ. (2011). அரசியலும் சிவில் சமூகமும். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

ஹம்ஸா, எஸ். ஐ. எம். (1995). அபிவிருத்திப் புவியியல். கொழும்பு: பசிபிக் அச்சகம்.

Abhayewardhana, H. A. P., Nanayakkara, G., Thelambura Hettige, S., Keertiratne, J. G., & Selvakumaran, N. (1999). Report of the Commission of Inquiry on Local Government Reforms. Colombo: Department of Government Printing.

Edrisinha, R. (2008). Power-sharing in Sri Lanka: Constitutional and political documents, 1926–2008. Berlin: Centre for Policy Alternatives and Berghof Foundation for Peace Support.

Rondinelli, D. A. (1981). Government decentralization in comparative perspective: Theory and practice in developing countries. International Review of Administrative Sciences, 47(2), 133–145. https://doi.org/10.1177/002085238004700205.

Smith, B. C. (1985). Decentralization: The territorial dimension of the state. London: Routledge.

Uyangoda, J. (2015). Local government and local democracy in Sri Lanka: Institution and social dynamisms. Colombo: Social Scientists' Association.

Willner, A. R. (1964). The underdeveloped study of political development. World Politics, 16(3), 468–482. https://doi.org/10.2307/2009583.